வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-நாராயணசாமி

தேதி 24.8.2024 நேரம் மாலை

6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

போலந்து உக்ரேன் நாட்டு பயணத்தை முடித்துக்கொண்டு பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று தாயகம் திரும்பினார்.

போரை முடிவுக்கு கொண்டு வர உக்ரேன் ரஷ்யா இடையே நேரடி பேச்சுவார்த்தை அவசியம் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இந்தியாவிற்கு 52.08 மில்லியன் டாலர் மதிப்புள்ள போர் கப்பலை விற்க அமெரிக்கா ஒப்புதல் அளித்துள்ளது.

3 நாள் பயணமாக சத்தீஸ்கர் மாநிலத்திற்கு சென்றுள்ள மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா இன்று

நக்சல் ஒழிப்பு ஆலோசனை கூட்டத்தை தொடங்கி வைத்து பேசினார்.

மோடி உக்ரேன் 1(17)

போரை முடிவுக்கு கொண்டு வர உக்ரேன் ரஷ்யா இடையே நேரடி பேச்சுவார்த்தை அவசியம் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். தமது போலந்து நாட்டு சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு பிரதமர் திரு நரேந்திர மோடி நேற்று உக்ரேன் சென்றடைந்தார். தலைநகர் கியூவில் பிரதமரை இந்திய சமூகத்தினர் வரவேற்றனர். பின்னர் உக்ரேனில் உள்ள தேசிய அருங்காட்சியகத்திற்கு சென்ற பிரதமர் அங்கு ரஷ்ய ராணுவ தாக்குதலில் உயிரிழந்த குழந்தைகளுக்கு அஞ்சலி செலுத்தினார். பிரதமருடன் அந்நாட்டு அதிபர் திரு ஜெலஸ்கி உடன் சென்றார். தொடர்ந்து அந்நாட்டு தாவரவியல் பூங்காவில் 2020 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட

மகாத்மா காந்தியின் உருவ சிலைக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

போரால் பாதிக்கப்பட்ட உக்ரேனுக்கு இந்தியாவின் சார்பில் மருத்துவ உதவி பொருட்களை அவர் உக்ரேன் அதிபர் திரு ஜெலன்ஸ்கி யிடம் வழங்கினார். இந்தியாவின் இந்த உதவிக்கு உக்ரேன் அதிபர் நன்றி தெரிவித்தார். இதன் தொடர்ச்சியாக கியூ நகரில் உள்ள அரண்மனையில் இரு நாட்டு தலைவர்களும் முக்கிய பேச்சுவார்த்தை நடத்தினர். இந்த சந்திப்பின் போது இருதரப்பு உயர்மட்ட தலைவர்களும் பங்கேற்றனர்.

மோடி உக்ரேன் 2 (18)

பின்னர் இருநாடுகளுக்கும் இடையே வேளாண்மை, சுகாதாரம், சமூக மேம்பாட்டு திட்டங்கள், கலாச்சாரம் ஆகிய துறைகளில் 4 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. தொடர்ந்து பிரதமரின் பயணம் குறித்து இந்தியா-உக்ரேன் கூட்டறிக்கை வெளியிடப்பட்டது. பரஸ்பர

நம்பிக்கை, மரியாதை, வெளிப்படை தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் இருநாட்டு மக்களின் நலனுக்காக இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது குறித்த உறுதிப்பாட்டை அவர்கள் வலியுறுத்தினர். உக்ரேனில் அமைதியை நிலைநாட்ட பேச்சுவார்த்தையை முன்னெடுக்க வேண்டும் என்று அந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டது. விரைவில் அமைதி திரும்புவதற்கு சாத்தியமான அனைத்து வகைகளிலும் பங்களிக்க இந்தியா தயாராக இருப்பதாக பிரதமர் சார்பில் உறுதி அளிக்கப்பட்டது. உக்ரேனில் தமக்கு அளிக்கப்பட்ட அன்பான வரவேற்பிற்கு பிரதமர் திரு நரேந்திர மோடி நன்றி தெரிவித்தார். உலகளாவிய ராஜதந்திர நடவடிக்கைகள் மூலம் இந்தியாவால் உக்ரேன்-ரஷ்யா போரை முடிவுக்கு கொண்டு வர முடியும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடியுடனான சந்திப்பிற்கு பின்னர் உக்ரேன் அதிபர் திரு ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடியின் அழைப்பை ஏற்று இந்தியா வருவதை தாம் ஆவலுடன் எதிர் நோக்கி வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஜெய்சங்கர் (11)

உலக அமைதி மாநாட்டில் இந்தியாவின் பங்களிப்பு தொடர வேண்டும் என்று உக்ரேன் வலியுறுத்தி உள்ளதாக மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார். பிரதமரின் உக்ரேன் பயணம் குறித்து செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்தியா உக்ரேனுக்கு அளித்த மருத்துவ உதவிகள் குறித்து விளக்கினார். பிரதமர் திரு நரேந்திர மோடி உக்ரேன் அதிபர் திரு ஜெலன்ஸ்கி உடனான சந்திப்பு ஆக்கப்பூர்வமானது என்றும், பிரதமர் திரு நரேந்திர

மோடியின் உக்ரேன் பயணம் திருப்பு முனையை ஏற்படுத்தி இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே, போலந்து மற்றும் உக்ரேன் பயணத்தை முடித்துக்கொண்டு பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று புதுடெல்லி திரும்பினார்.

*ராஜ்நாத் சிங்* (19)

திறன் மேம்பாட்டிற்காகவும், நிலையான தொழில்நுட்பம் மற்றும் தொழில்துறை கூட்டாண்மைக்காக பாதுகாப்பு துறையில் அமெரிக்காவுடன் நெருக்கமாக பணியாற்ற இந்தியா எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாக மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார். அமெரிக்கா சென்றுள்ள அவர், அந்நாட்டின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு ஜேக் சல்லிவனை சந்தித்து இருதரப்பு நல்லுறவுகள் குறித்து ஆலோசனை நடத்தினார். அமெரிக்காவிற்கு 4 நாள் அரசு முறை பயணம் மேற்கொண்டுள்ள அவர் வாஷிங்டன்னில் அமெரிக்க பாதுகாப்புத் துறை அமைச்சரையும் சந்தித்து பேசினார். அப்போது சுதந்திரமான கப்பல் போக்குவரத்து மற்றும் பிராந்திய பாதுகாப்பிற்கு இந்திய கடற்படை வலுவான பங்களிப்பை அளித்து வருவதாக, அந்நாட்டு

பாதுகாப்புத் துறை அமைச்சர் பாராட்டு தெரிவித்தார். பசிபிக் பிராந்தியத்தில் அமைதியை நிலை நாட்டுவது குறித்து இந்தியா-அமெரிக்கா இடையே பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து இருவரும் ஆலோசனை நடத்தியதாக பெண்டகன் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது. இதனிடையே, இந்தியாவிற்கு அதிநவீன் போர் கப்பல் விற்க, அமெரிக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது. சுமார் 52.08 மில்லியன் டாலர் மதிப்புள்ள இந்த போர் கப்பலை இந்தியாவிற்கு விற்க அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் ஒப்புதல் அளித்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

*அமித் ஷா* (15)

சத்தீஸ்கர் தலைநகர் ராய்பூரில் நக்சல் தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட மாநிலங்களுக்கு

இடையேயான ஒருங்கிணைப்பு கூட்டம் இன்று நடைபெற்றது. இக் கூட்டத்திற்கு மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தலைமை ஏற்றுள்ளார். இந்த கூட்டத்தில் சத்தீஸ்கர் உள்பட தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட 7 மாநிலங்களை சேர்ந்த தலைமை செயலர்கள், காவல் துறை இயக்குநர்கள் பங்கேற்றுள்ளனர். இந்த கூட்டத்தில் பேசிய மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, பிரதமர் திரு நரேந்திர மோடியின் தலைமையிலான மத்திய அரசு நக்சலிசத்தை முற்றிலுமாக ஒழிக்க உறுதி பூண்டுள்ளதாக தெரிவித்தார். முன்னதாக அவர் இன்று ராய்பூருக்கு அருகில் உள்ள சம்பா ரணிலில் உள்ள மகாபிரபு வல்லபாச்சாரியா ஆசிரமம் மற்றும் சம்பேஷ்வர் மகாதேவ் கோவிலுக்கு சென்று பிராத்தனை செய்தார். நாளை அவர் ராய்பூரில் உள்ள போதை பொருள் கட்டுப்பாட்டு பணியக அலுவகத்தை திறந்து வைக்க உள்ளார்.

தொடர்ந்து சத்தீஸ்கரில் கூட்டுறவு துறையின் விரிவாக்கம் குறித்த ஆய்வுக் கூட்டத்தையும் நடத்த உள்ளார்.

விபத்து (9)

நேபாளத்தில் பேருந்து கவிழ்ந்த விபத்தில் மகராஷ்டிர மாநிலம் ஜெல்காம் மாவட்டத்தை சேர்ந்த 24 பேர் உயிரிழந்தனர். விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு, பிரதமர் திரு நரேந்திர மோடி, ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார். காயமடைந்தவர்களுக்கு இந்திய தூதரகத்தின் மூலம் அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என்று அவர் தமது வலைதள பதிவில் தெரிவித்துள்ளார். மேலும், பேருந்து விபத்தில் உயிரிழந்தவர்களின் உறவினர்களுக்கு பிரதமரின் தேசிய நிவாரண நிதியில் இருந்து 2 லட்ச ரூபாயும், காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

*மன் கி பாத் (7)*

பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை காலை 11 மணிக்கு ஆகாஷ்வாணியில் ஒலிபரப்பாகும் மன் கீ பாத் எனும் மனதின் குரல் நிகழ்ச்சியில் தமது எண்ணங்களை நாட்டு மக்களிடையேயும், வெளிநாடுகளில் வாழும் மக்களுடனும் பகிர்ந்து கொள்ள இருக்கிறார். இது பிரதமரின் 113 ஆவது நிகழ்ச்சியாகும். இந்த நிகழ்ச்சி ஆகாஷ்வாணி, தூர்தர்ஷன், ஏஆிர் நியூஸ் இணையதளம் ஆகியவற்றிலும் ஒலிபரப்பப்படும். இந் நிகழ்ச்சியை தொடர்ந்து, இதன் தமிழாக்கம் ஒலிபரப்பாக உள்ளது.

மோடி பயணம் (17)

பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை மகராஷ்டிரா மற்றும் ராஜஸ்தான் மாநிலங்களுக்கு செல்ல உள்ளார். நாளை காலை மகராஷ்டிராவின் ஜல்கானுக்கு செல்லும் அவர், அங்கு லக்பதி திதி திட்டத்தின் மூலம், லட்சாதிபதியாக மாறிய 11 லட்சம் பெண்களுக்கு சான்றிதழ்களை வழங்க உள்ளார். தொடர்ந்து அவர் நாடு முழுவதிலும் உள்ள லட்சாதிபதி பெண்களுடனும் உரையாட உள்ளார். மேலும், 48 லட்சம் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் பயன் பெறும் வகையில், 2 ஆயிரத்து 500 கோடி ரூபாய் சுழல் நிதியையும் பிரதமர் வெளியிட உள்ளார். மேலும், 26 லட்சம் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் பயன்பெறும் வகையில் 5 ஆயிரம் கோடி ரூபாய் வங்கிக் கடனையும் அவர் வழங்க உள்ளார். லட்சாதிபதி யோஜனா திட்டம் தொடங்கப் பட்டதில் இருந்து 1 கோடி பெண்கள் ஏற்கனவே இத்திட்டத்தில்

லட்சாதிபதிகளாக ஆக்கப்பட்டுள்ளனர். 3 கோடி லட்சாதிபதி பெண்களை உருவாக்க அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது குறிப்பிடத் தக்கது. நாளை மாலை ராஜஸ்தான் மாநிலம் ஜோத்பூர் செல்லும் பிரதமர், ராஜஸ்தான் உயர் நீதிமன்றத்தின் பவள விழா கொண்டாட்டங்களின் நிறைவு விழாவிலும் பங்கேற்க உள்ளார். நிகழ்ச்சியில், ராஜஸ்தான் நீதிமன்ற அருங்காட்சியகத்தையும் அவர் திறந்து வைக்க உள்ளார்.

*ஜோதிர் ஆதித்ய சிந்தியா* (10)

தரமான தொலை தொடர்பு சேவைகள் மக்களுக்கு கிடைப்பதை தொலை தொடர்பு சேவை நிறுவனங்கள் உறுதி செய்ய வேண்டும் என்று மத்திய தொலை தொடர்புத் துறை அமைச்சர் திரு ஜோதிர் ஆதித்ய சிந்தியா கேட்டுக் கொண்டுள்ளார். புதுடெல்லியில் தொலை தொடர்பு சேவை நிறுவனங்களின் ஆலோசனை

கூட்டத்தில் பங்கேற்று பேசிய அவர், இந்தியாவின் எதிர் கால தொலைதொடர்பு சேவையை விரிவுபடுத்தி, ஒருங்கிணைந்த கொள்கை முடிவுகளை வகுப்பதே இந்த கூட்டத்தின் முக்கிய நோக்கம் என கூறினார். 6 ஜி சேவை, தொலை தொடர்பு துறையில் ஆராய்ச்சி, தர மேம்பாடுகளை புதிய உச்சத்திற்கு கொண்டு செல்லும் நடைமுறைகள் குறித்தும் அவர் இந்த கூட்டத்தில் விவாதித்தார்.

*கல்வி அமைச்சகம்* (12)

பள்ளிகளில் குழந்தைகளின் பாதுகாப்பு குறித்த வழிகாட்டு நெறிமுறைகளை அமல்படுத்த வேண்டும் என்று மாநில அரசுகளுக்கு மத்திய கல்வி அமைச்சகம் அறிவுறுத்தி உள்ளது. 2021 ஆம் ஆண்டு வகுக்கப்பட்ட பள்ளி பாதுகாப்பு வழிகாட்டு நெறிமுறைகளை அமல்படுத்த வேண்டும் என்றும், கல்வி அமைச்சகம் கேட்டுக் கொண்டுள்ளது. இது குறித்து அனைத்து மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு மத்திய கல்வித்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில், போக்சோ வழிகாட்டு நெறிமுறைகளை உள்ளடக்கி, இந்த பள்ளி பாதுகாப்பு நெறிமுறை உருவாக்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. குறிப்பாக, அரசு நிதியுதவி பெறும் தனியார் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளின் பாதுகாப்பிற்கு பள்ளி நிர்வாகமும் பொறுப்பேற்றும் வகையில் விதிகள் திருத்தப் பட்டுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

போலந்து உக்ரேன் நாட்டு பயணத்தை முடித்துக்கொண்டு பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று தாயகம் திரும்பினார்.

போரை முடிவுக்கு கொண்டு வர உக்ரேன் ரஷ்யா இடையே நேரடி பேச்சுவார்த்தை அவசியம் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இந்தியாவிற்கு 52.08 மில்லியன் டாலர் மதிப்புள்ள போர் கப்பலை விற்க அமெரிக்கா ஒப்புதல் அளித்துள்ளது.

3 நாள் பயணமாக சத்தீஸ்கர் மாநிலத்திற்கு சென்றுள்ள மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா இன்று நக்சல் ஒழிப்பு ஆலோசனை கூட்டத்தை தொடங்கி வைத்து பேசினார்.